**an International CBSE Finger Print School**
**Coimbatore**

# இயல் 1

## அ. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி.

**இயல்- 1**

**1. பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி**

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக்குமரிக்கடல் கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!
தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமேகலை வடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

**வினாக்கள்**

1.தென்னன்மகள் என்று குறிப்பிடப்படுபவர் யார்?
அ.அரசன்மகள் ஆ. பாண்டியன்மகள் இ. தெய்வமகள் ஈ. குலமகள்

2.பாப்பத்தே ! எண்தொகையே ! என்று குறிப்பிடப்படும் சங்ககால நூல்களின் பெயர்கள் ..... ?
அ.பதினெண் கீழ்க்கணக்கு ஆ.பதினெண் மேற்கணக்கு
இ.நீதிநூல்கள் ஈ. சமயநூல்கள்

3. முடிதாழ யாரை வாழ்த்துவோம்?
அ .இறைவன் ஆ.அன்னை இ.தமிழை ஈ.குருவை

4.நறுங்கனி, செந்தமிழ் ( இலக்கணக்குறிப்பு தருக)
அ.வினைத்தொகை ஆ.பண்புத்தொகை
இ.அன்மொழித்தொகை ஈ.உவமைத்தொகை

5. இப்பாடல் இடம்பெற்ற நூல் ________
அ) இரட்டுறமொழிதல் ஆ) நீதிவெண்பா இ) கனிச்சாறு ஈ) உலகியல் நூறு

6. இப்பாடலின் ஆசிரியர் ________
அ) பாரதியார் ஆ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
இ) தமிழழகனார் ஈ) பாரதிதாசன்

7.தென்னன் மகளே - என்ற தொடரில் தென்னன் என்பது ________
அ) சேரன் ஆ) பாண்டியன் இ) தெற்குப் பகுதி ஈ) அரசன்

8. பாடலில் உலகப் பொதுமறையாக குறிப்பிடப்படும் நூல் ________
அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு இ) திருக்குறள் ஈ) சிலப்பதிகாரம்

9.இப்பாடலில் ஆசிரியர் யாரை வாழ்த்துகிறார்?
அ) அன்னை மொழி ஆ) தாய்நாடு இ) அன்னை ஈ) தாய் அன்பு

10. இப்பாடல் இடம் பெற்றுள்ள தலைப்பு யாது?
அ) இரட்டுற மொழிதல் ஆ) மலைபடுகடாம்
இ) அன்னை மொழியே ஈ ) காசிக்காண்டம்

11. பாவலரேறு நடத்திய இதழ்கள் ...............
அ)தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆ) சுதேசமித்திரன் ,இந்தியா
இ) தமிழ்த்தென்றல் ,கல்கி ஈ) அகலிகை , இந்திய தேசம்

12. பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர்.......
அ) சண்முகசுந்தரம் ஆ) துரை.மாணிக்கம் இ) சுரதா ஈ) முத்தையா

13. அன்னை மொழியே பாடல் இடம்பெற்றுள்ள இருவேறு தலைப்புகள் யாவை?
அ) கனிச்சாறு , தனிப்பாடல் திரட்டு
ஆ) தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும்
இ) இரட்டுற மொழிதல் , இல்லொழுக்கம்
ஈ) முல்லைப்பாட்டு , கூத்தராற்றுப்படை

14. தமிழ்க்கருவூலமாய் அமைந்த பெருஞ்சித்திரனாரின் நூல் எது?
அ) உலகியல் நூறு ஆ) நூறாசிரியம்
இ) எண்சுவை எண்பது ஈ)திருக்குறள் மெய்ப்பொருளுரை

15. மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள் , கனிச்சாறு என்பன யாரால் எழுதப்பட்ட நூல்கள் ..........
அ) பாவலரேறு ஆ) சந்தக்கவிமணி இ) கவியரசு ஈ) மகாகவி
16. நற்கணக்கே என்பது ..........
அ) ஐம்பெருங்காப்பியங்கள் ஆ) ஐஞ்சிறுங்காப்பியங்கள்
இ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ஈ) சிற்றிலக்கிய நூல்கள்
17. மாண்புகழே - என்பதன் பொருள் .......
அ) பெருமைக்குரியவளே ஆ) சிறப்புக்குரியவளே
இ) அழகானவளே ஈ) வியக்கத்தக்கவளே
18. அழகான காப்பியமாகக் கூறப்படுவது.......
அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை
இ) சீவகசிந்தாமணி ஈ) வளையாபதி
19. பழம்பெருமையும் இலக்கிய வளமும் கொண்ட மொழி எது ?
அ) ஆங்கிலம் ஆ) இந்தி இ) தமிழ் ஈ) மலையாளம்
20. முன்னைக்கும் முன்னை, முகிழ்த்த ( பொருள் தருக)
அ) பழமைக்கும் பழமை, தோன்றிய ஆ) தோன்றிய , பழமைக்கும் பழமை
இ) அரிய , சிறப்பு ஈ) தமிழ் , வளர்ந்த
21. தும்பி , யாண்டும் (பொருள் தருக)
அ) வண்டு , எப்பொழுதும் ஆ) வண்டு, தொப்புள்
இ) வண்டு , தமிழ் ஈ) தமிழ், வண்டு
22. தமிழன்னை நிலைத்து அரசாண்ட இடம் எது?
அ) சிதம்பரம் ஆ) மதுரை இ) சென்னை ஈ) குமரிக்கண்டம்
23. " சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் " என்று கூறியவர் யார்?
அ) பெருஞ்சித்திரனார் ஆ) க. சச்சிதானந்தன்
இ) தமிழழகனார் ஈ) பெருங்கௌசிகனார்
24. இப்பாடலில் இடம்பெறாத காப்பியங்கள் எவை?
அ) சீவக சிந்தாமணி , வளையாபதி , குண்டலகேசி
ஆ) சிலப்பதிகாரம் , மணிமேகலை , குண்டலகேசி
இ) சிலப்பதிகாரம் , சீவகசிந்தாமணி , வளையாபதி
ஈ) மணிமேகலை, குண்டலகேசி , சீவகசிந்தாமணி
25. செப்பரிய (பொருள் தருக)
அ) சொல்லுவதற்கு அரிய ஆ) பார்ப்பதற்கு அரிய
இ) காண்பதற்கு அரிய ஈ) எழுதுவதற்கு அரிய

<u>2 ) பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி</u>

முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணை கிடந்தே சங்கத்தவர் காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு .

<u>வினாக்கள்</u>

1. இப்பாடலைப் பாடியவர் புலவர் யார் ?
அ) தாயுமானவர் ஆ) காளமேகப் புலவர்
இ) புகழேந்திப் புலவர் ஈ) தமிழழகனார்
2. தமிழ் எத்தனை சங்கங்களைக் கண்டது ?
அ) நான்கு ஆ) மூன்று இ) இரண்டு ஈ) ஐந்து
3 ) கடல் தருவன எவை?
அ) முத்தும் அமிழ்தும் ஆ) மீனும் உப்பும்
இ) பவளமும் முத்தும் ஈ) மழையும் காற்றும்
4 . சங்கத்தவர் யார் ?
அ)சங்க கால அரசர் ஆ) வணிகர் இ)சங்கப் புலவர் ஈ) வணிகர் சங்கம்

5. ஆழி (பொருள் தருக)
அ) மோதிரம் ஆ) கடல் இ) முத்து ஈ) வைரம்
6. ஆழிக்கு இணையானது எது ?
அ)கடல் ஆ) முத்து இ) தமிழ் ஈ) சங்கு
7. முத்தமிழ் எனப்படுவது ..........................................
அ) இயல் , இசை , நாடகம் ஆ) வெண்சங்கு , சலஞ்சலம் , பாஞ்சசன்யம்
இ) முதல் , இடை , கடை ஈ) முத்து , பவளம் , சங்கு
8. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் ..............................
அ) தனிப்பாடல் திரட்டு ஆ) மலைபடுகடாம்
இ) பரிபாடல் ஈ) கூத்தராற்றுப்படை
9. இப்பாடல் இடம் பெற்றுள்ள தலைப்பு .......................................
அ) இரட்டுற மொழிதல் ஆ) அன்னை மொழியே
இ) இல்லொழுக்கம் ஈ) காற்றே வா
10. இரட்டுற மொழிதல் அணியின் வேறு பெயர்.....................................
அ) உவமை அணி ஆ) உருவக அணி
இ) சிலேடை அணி ஈ) வஞ்சப்புகழ்ச்சி அணி
11. வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் எனப்படுவன..........................
அ) முத்தின் வகைகள் ஆ) சங்கின் வகைகள்
இ) தமிழின் வகைகள் ஈ) காப்பிய வகைகள்
12. சங்கினைத் தடுத்து நிறுத்தியது எது ?
அ) கடல் ஆ) கடலலை இ) முத்து ஈ) கப்பல்
13. துய்ப்பது , ஈண்டு, மேவலால் ( பொருள் தருக)
அ) தருவது , இருந்து , பெறுதல் ஆ) பெறுதல் , தருவது , இருந்து
இ) தருவது , பெறுதல் , இருந்து ஈ) இருந்து , பெறுதல் , தருவது
14. புலவர்கள் பலரின் பாடல்களின் தொகுப்பு......
அ) தனிப்பாடல் திரட்டு ஆ) திருக்குறள்
இ) சீவக சிந்தாமணி ஈ ) மணிமேகலை
15. முத்தமிழ் ( பிரித்து எழுதுக)
அ) மூன்று + தமிழ் ஆ) முத் + தமிழ் இ) முதுமை தமிழ் ஈ)மு+ தமிழ்
16. வணிகலன் எனப்படுவது........
அ) பாஞ்சசன்யம் ஆ) வணிகக் கப்பல் இ) மணிமேகலை ஈ) சங்கத்தவர்
17. தமிழழகனாரின் இயற்பெயர் யாது ?
அ) துரை.மாணிக்கம் ஆ) சண்முகசுந்தரம் இ) முத்தையா ஈ)சுப்பிரமணி
18. தமிழழகனார் இயற்றிய சிற்றிலக்கிய நூல்களின் எண்ணிக்கை......
அ) 21 ஆ) 12 இ) 10 ஈ) 5
19. ஒரு சொல்லோ , தொடரோ இரு பொருள்பட வருவது.......... எனப்படும்.
அ) இரட்டுறமொழிதல் அணி ஆ) வேற்றுமை அணி
இ) தன்மையணி ஈ) இயல்பு நவிற்சி அணி
20. இப்பாடலில் அமைந்த பாடுபொருள் எது?
அ) மொழி ஆ) இயற்கை இ) வணிகம் ஈ) கலைகள்

<u>3.சான்று தருக.</u>

1.செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது __
அ)இன்னிசை அளபெடை ஆ)சொல்லிசை அளபெடை
இ)ஒற்றளபெடை ஈ)செய்யுளிசை அளபெடை
2.தாமரை மலர்ந்தது
அ)தனிமொழி ஆ)தொடர்மொழி இ)பொதுமொழி ஈ) மொழி
3.பாடியவர்

அ)தொழிற்பெயர் ஆ)வினையாலணையும்பெயர்
இ)எதிர்மறைத்தொழிற்பெயர் ஈ)வினையடி

4.எஃஃகிலங்கிய
அ)உயிரளபெடை ஆ)ஒற்றளபெடை
இ)செய்யுளிசைஅளபெடை ஈ)இன்னிசைஅளபெடை

5.தொழிற்பெயர் ______ உரியது.
அ)தன்மை ஆ)முன்னிலை இ) படர்க்கை ஈ)மூவிடம்

6.அளபெடை என்பது
அ)நீண்டு ஒழித்தல் ஆ) மீண்டும் ஒலித்தல் இ)நீண்டு ஒலித்தல் ஈ)ஒலித்தல்

7.ஒற்றளபெடை எழுத்துகள்
அ)த்,ந் ஆ)ப்,வ் இ)ங்,ஞ் ஈ)ட்,ம்

8.மொழியில் முதல், இடை, கடை என அளபெடுக்கும் அளபெடை
அ)இன்னிசைஅளபெடை ஆ)சொல்லிசை அளபெடை
இ)செய்யுளிசைஅளபெடை ஈ)ஒற்றளபெடை

9.தனிமொழி
அ)கண்ணன் ஆ)கண்ணன் படித்தான்
இ)கண்ணன் வீட்டுக்குச் சென்றான் ஈ)கண்ணன் ஓவியம் வரைந்தான்

10.விகுதி பெற்ற தொழில்பெயர்
அ)பாடு ஆ)பாடாமை இ)பாடல் ஈ)பாடி

## 4. கூறியவாறு செய்க.

1.நடத்தல் (எதிர்மறைத் தொழிற்பெயராக மாற்றுக)
அ)நடந்தான் ஆ)நடக்கவில்லை இ)நடவான் ஈ)நடவாமை

2.கெடுதல் (முதல்நிலைத் தொழிற்பெயராக மாற்றுக)
அ)கேடு ஆ)கெடு இ)கேடுதல் ஈ)கெடாமை

3.கெடுப்பது (இன்னிசை அளபெடையாக மாற்றுக)
அ)கெடுப்பதும் ஆ)கெடுப்பதூஉம் இ)கெடுப்பதுஉம் ஈ)கெடுப்பதுஊம்

4.வா (விகுதிபெற்ற தொழிற்பெயராக மாற்றுக)
அ)வருதல் ஆ)வாராமல் இ)வாராமை ஈ)வரச்செய்தல்

5.பாடு (வினையாலணையும் பெயராக மாற்றுக)
அ)பாடுதல் ஆ)பாடியவர் இ)பாடினான் ஈ)பாடவில்லை

6.வருதல் (வினையடி கண்டறிக)
அ)வரு ஆ)வா இ)வந்த ஈ)வந்து

7.வரனசை (சொல்லிசை அளபெடையாக மாற்றுக)
அ)வரனசைஈ ஆ)வரனசைஇ இ)வரனசஇ ஈ)வரனசைஐ

8.சுடுதல்(முதல்நிலைத் தொழிற்பெயராக மாற்றுக)
அ)சுடு ஆ)சூடு இ)சுட்ட ஈ)சுட்டு

9.பொறுத்தார் பூமி ஆள்வார் (வினையாலணையும் பெயரைக் கண்டறிக)
அ)பொறு ஆ)பொறுத்தல் இ)பொறுத்தார் ஈ)ஆர்

10. தம்பி (அளபெடையாக மாற்றுக)
அ)தம்பிஈ ஆ)தம்பிஇ இ)தம்பீஇ ஈ)தம்பீஈ

## 5.நிரப்புக.

1.அளபெடையின் வகைகள் ----------------
அ) எட்டு ஆ)இரண்டு இ)நான்கு ஈ)ஐந்து

2.செய்யுளில் ஓசை குறையும்போது வரும் அளபெடை ----------------
அ)இன்னிசைஅளபெடை ஆ)சொல்லிசைஅளபெடை
இ)ஒற்றளபெடை ஈ)இசைநிறைஅளபெடை

3.பொது மொழி ---------------------
அ)பத்து ஆ)எட்டு இ)ஏழு ஈ)ஆறு

# SNS academy

**an International CBSE Finger Print School**
**Coimbatore**

4.தொழில் செய்யும் கருத்தாவைக் குறிப்பது ----------------------

அ)தொழில்பெயர் ஆ)முதனிலைத் தொழிற்பெயர்
இ)முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் ஈ)வினையாலணையும் பெயர்

5.நல்ல படாஅ பறை --------------------

அ)செய்யுளிசை அளபெடை ஆ)இன்னிசைஅளபெடை
இ)சொல்லிசை அளபெடை ஈ)ஒற்றளபெடை

6.வினை,பெயர்த் தன்மையாகி வினையையே உணர்த்தி நிற்பது ----------------

அ) அளபெடை ஆ)வினையாலணையும் பெயர்
இ) பண்புத்தொகை ஈ)தொழிற்பெயர்

7. விகுதி பெறாமல் வினைப்பகுதியே தொழில் பெயராதல் ------------------

அ)எதிர்மறைத் தொழிற்பெயர் ஆ)முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்
இ)முதனிலைத் தொழிற்பெயர் ஈ)தொழிற்பெயர்

8.சார்பெழுத்துகளின்வகைகள் ------------------------------

அ)பத்து ஆ)எட்டு இ)ஒன்பது ஈ)ஆறு

9.ஒரு சொல் தனித்து நின்று ஒருபொருளையும், அச்சொல் பிரிந்து நின்று வேறுபொருளையும் தந்தால் ................

அ)தனிமொழி ஆ)தொடர்மொழி இ)பொதுமொழி ஈ)சொல்

10.உறாஅர்க்கு உறுநோய் --------------------- அளபெடை.

அ)மொழிமுதல் ஆ)மொழிஇடை இ)மொழிகடை ஈ)மொழிஇறுதி

<u>6. இலக்கணக் குறிப்புதருக.</u>

1.உரனசைஇ

அ)இன்னிசைஅளபெடை. ஆ)சொல்லிசைஅளபெடை
இ)செய்யுளிசைஅளபெடை. ஈ)இசைநிறைஅளபெடை

2.நடவாமை

அ)தொழில்பெயர் ஆ)முதல்நிலைத் தொழிற்பெயர்
இ)முதல்நிலைத் திரிந்த தொழிற்பெயர் ஈ)எதிர்மறைத் தொழிற்பெயர்

3.வினையாலணையும் பெயர்

அ)பாடிய ஆ)பாடல் இ)கேட்ட ஈ)கேட்டவர்

4)சார்பெழுத்து அல்லாதது

அ)உயிர்மெய் ஆ)ஆய்தம் இ)உயிரளபெடை ஈ)உயிர்

5.கண்

அ)பகுபதம் ஆ)பகாப்பதம்
இ)தொழிற்பெயர் ஈ)வினையாலணையும் பெயர்

6.ஒற்றளபெடை

அ)கெடுப்பதூஉம் ஆ)எஃகிலங்கிய
இ)எஃஃகிலங்கிய ஈ)வெஃவார்க்கில்லை

7.செய்யுளிசை அளபெடையின் வேறுபெயர்

அ)இன்னிசைஅளபெடை ஆ)சொல்லிசைஅளபெடை
இ)இசைநிறைஅளபெடை ஈ)ஒற்றளபெடை

8.முதனிலைத் தொழிற்பெயர்

அ)சுடுதல் ஆ)சூடு இ)சுடு ஈ)சுட்டு

9.வினையாலணையும் பெயர்____________உரியது


அ)தன்மை ஆ)முன்னிலை இ)படர்க்கை ஈ)மூவிடம்

10.உயிரளபெடையின் வகைகள்

அ)இரண்டு ஆ)மூன்று இ)ஆறு ஈ)ஐந்து

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

5.ஏடு எடுத்தேன் கவி ஒன்று எழுத
என்னை எழுது என்று சொன்னது இந்தக் காட்சி
பூட்டிய பூட்டு என் அறியாமையைப் பற்றி எழுது என்றது
திறந்த பூட்டு என் புத்தக வாசிப்பைப் பற்றி எழுது என்றது
நான் எழுதுகிறேன் அறிவு பூட்டை திறப்பது புத்தகம் என்று




**கல்வி**

மாணவப் பருவத்திலே
கல்வி என்னும்
அறிவுப் பூட்டைத் திறந்திடு....
மதிப்பெண் பெற்றிடவே
பாடத்தைப் படித்திடு !

முயற்சியைத் தொடர்ந்து
மூளையிலே நிறுத்திடு !
சாவி கொண்டு பூட்டிடு !
எப்போதும் நினைத்து
ஏகாந்தமாய் இருந்திடு !
கல்வி என்னும்
அறிவுக் கண்ணைத்
திறந்திடு .